குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.56/2020

அ.சா.6

2024–ம் ஆண்டு நவம்பர் 18–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மூர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கவேல் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.15 மணி,

Accused Nayagan Present. Advocate Mr.Sabarinathan present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் தற்போது வீரகனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.12.2019 ஆம் தேதி 13.00 மணியளவில் நான் ஓமலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, ஓமலூரைச் சேர்ந்த சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று ஓமலூர் காவல் நிலைய குற்ற எண். 466/2019 சட்டப்பிரிவு 379 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

2. பின்பு, முதல் தகவல் அறிக்கை மற்றும் வாதியின் புகாரை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கை நான் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு, 05.12.2019 ஆம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வரதராஜ் மற்றும் சரஸ்வதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த**

**பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்பு, சம்பவ இட சாட்சிகளான கோவிந்தராஜ், மகேந்திரன், சரஸ்வதி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் வரதராஜ், சரஸ்வதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில், ஓமலூர் காவல் நிலைய சரகம் பிருந்தாவனம் தியேட்டர் அருகே சந்தேகத்திற்கிடமான முறையில் இருந்த எதிரி நாயகனை விசாரித்தபோது,

4. அவர் இந்த வழக்கு சம்பவத்தின் குற்ற செயலில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டார். அவரை 16.30 மணியளவில் கைது செய்து அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பிரகாஷ் மற்றும் இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். (**அந்த வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி "நான் இன்று 05.12.2019 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு ஓமலூர் பஸ் நிலையம் சிவா காபிபார் அருகில் ஒரு பெண் கழுத்தில் இருந்து ........... தாலியுடன் கூடிய தங்க நகையை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

5. பின்பு, எதிரி நாயகன் ஆஜர் செய்த சுமார் 2 1/2 பவுன் எடைகொண்ட தங்க தாலி செயின் ஒன்று, சுமார் 1/2 பவுன் எடை கொண்ட தங்க தாலி ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகளின் முன்னிலையில் 17.30 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். ( **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

6. பின்பு, சாட்சிகள் பிரகாஷ் மற்றும் இஸ்மாயில் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சி சரஸ்வதி என்பவரை விசாரித்து வழக்கு சொத்தினை அடையாளம் காட்டியதை உறுதி செய்தேன். வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ( **அந்த படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. பின் பின்பு, வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.31 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.